DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 302/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : டாக்டர்.செந்தில்சேகர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்தவமனையில் முதன்மை குடிமை மருத்துவதாக பணிபுரிந்து வருகிறேன். அதே மருத்துவமனையில் கடந்த 21.02.2014 அன்று காலை 10.50 மணியளவில் நான் பணியில் இருந்தபோது செல்லதுரை என்பவர் சிகிச்சைக்கு வந்திருந்தார். அவரை விசாரித்ததில் அதே நாளில் காலை 9.30 மணியளவில் மேலநீலிதநல்லூர் வெளியப்பசாமி கோவில் முன்பு வைத்து அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள் அரிவாள் மற்றும் கல்லால் காயம் ஏற்படுத்தியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது கன்னத்தில் 3x3x2 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது
2. நெற்றியின் இடது பகுதியில் 4x3x3 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.
3. இரண்டு முழுங்கால் முன்பகுதியிலும் வலி இருப்பதாக கூறினார்.

4. மூக்கின் இடதுபகுதியில் 3x2x1 செமீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. மேற்கூறிய காயங்கள் அனைத்திலும் தொடுவலி காணப்பட்டது. அவருக்கு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு பின் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பப்பட்டார். அங்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் மற்றும் சிடிஸ்கேன் ஆகியவற்றில் நார்மலாக இருந்தது. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட 1 முதல் 4 காயங்கள் சாதாரண காயங்கள் என காயச்சான்று அளித்தேன். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய 1வது காயம் அரிவாளால் கொத்தும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் மிதமான அழுத்தத்தை கொண்டு அரிவாளால் வெட்டும்போது ஏற்பட வாய்ப்புண்டு. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள 3வது காயம் காயம்பட்ட நபரால் பொய்யாக என்னிடம் சொல்லியிருக்க வாய்ப்புள்ளதா என்றால் அவ்வாறு கூறியிருக்க வாய்ப்பு அரிதானது. போலீசார் வழக்கில் சம்பந்தப்பட்டதாக தெரிவித்து அரிவாள் எதையும் காண்பித்து என்னிடம் கருத்துரை பெற்றார்களா என்றால் இல்லை. பொதுவாக சண்டையில் ஒரு நபர் மற்றொரு நபரை அரிவாளால் மிதமாக தாக்க வாய்ப்பில்லை என்றால் அது அந்த சண்டையில் தாக்கிய நபரின் மனஓட்டம் பொறுத்தது. நான் முதல்விசாரணயில் கூறிய காயக்ஙள் ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் செல்லும் போது தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் அந்த காரணத்தால் மேற்படி காயங்கள் ஏற்பட அரிதாக வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**